**கவனிக்க.**- *07.09.2012 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1776 - 2012 සැප්තැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2012.09.14

*1776 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

**(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)**


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1338 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவு திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | - | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| | | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**- (i) *சிறுவர் புனர்வாழ்வு மையம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 10 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

(ii) *சிறிலக பிரஜா சாந்தி மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2012, ஓகத்து மாதம் 17 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்***, *அதாவது 2012, ஒற்றோபர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2012, செத்தெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**பி. கே. எஸ். ரவீந்திர,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2012 ஆம் ஆண்டு யூன் மாதம் 23 ஆந் திகதி.*

# பதவிகள் — வெற்றிடம்

## தலவாக்கலை - லிந்துலை நகர சபை

*மத்திய மாகாண அரச சேவையில் பதவிகள் வெற்றிடம்*

*தலவாக்கலை- லிந்துலை நகர சபையில் தற்போது வெற்றிடங்களாயுள்ள பின்வரும் பதவிகளுக்கு ஆட்சேர்த்துக் கொள்ளும் பொருட்டு உரிய தகைமைகளை பூர்த்தி செய்திருக்கும் மத்திய மாகாண சபையினுள் நிரந்தர வசிப்பாளர்களாகிய இலங்கை பிரசைகளிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

| தொடர் இலக்கம் | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| 01 | சாரதி (தரம் ii) | 01 | PL 3 2006 A<br>ரூபா 12.470 - 10×130 - 10 × 145 - 10 × 160 - 12 × 170 - ரூபா 18,860 | கல்வி தகைமைகள் :<br>1. க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய பொது கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் பாடங்களுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>பொது தகைமைகள் :<br>1. இலங்கை பிரசையாக இருத்தல். மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல். விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு முன் தொடர்ச்சியாக 3 ஆண்டுகள், மத்திய மாகாணத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல்.<br>2. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது 18 க்கும் 45 இற்கும் இடைப்பட்டிருத்தல் (என்றாலும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை கட்டுப்பாடற்றது.)<br>3. வாகன சாரதியாக 3 வருட அனுபவம் இருத்தல் (சான்றிதழ் மூலம் உறுதிப்படுத்தல் வேண்டும்.)<br>4. குறைந்த பட்ச உயரம் 5 அடி 2 1/2 அங்குலம் இருத்தல்.<br>5. பகல் இரவு சேவைகளில் நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராகவும் சிறந்த கண்பார்வை உள்ளவராகவும் இருத்தல்.<br>6. பெருந்தெருக்கள் சட்டக்கோவை தொடர்பாக பூரண அறிவு இருத்தல். |
| 02 | சாரதி (தரம் ii) | 01 | PL 1 2006 A<br>ரூபா 11.730 - 18×120 - ரூபா 13,890 (மாதாந்தம்) | கல்வி தகைமைகள்<br>1. க. பொ. த. (சா.த.) பரீட்சையில் அல்லது தேசிய பொது கல்விச் சான்றிதழ் பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் பாடங்களுடன் குறைந்த பட்சம் இரண்டு திறமைச் சித்தியுடன் இரண்டிற்கு மேற்படாத அமர்வுகளில் 6 பாடங்களில் சித்தி அடைந்திருத்தல் வேண்டும்.<br><br>பொது தகைமைகள் :<br>1. இலங்கை பிரசையாக இருத்தல்.<br>2. விண்ணப்பப்படிவம் ஏற்றுக்கொள்ளப்படும் தினத்திற்கு வயது 18 க்கும் 45 இற்கும் இடைப்பட்டிருத்தல் |

| தொடர் இலக்கம் | பதவிகள் | பதவிகளின் எண்ணிக்கை | சம்பள அளவுத்திட்டம் | கல்வி மற்றும் வேறு தகைமைகள் |
|---|---|---|---|---|
| | | | | (என்றாலும் அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையிலுள்ள நிரந்தர உத்தியோகத்தர்களுக்கு உச்ச வயதெல்லை கட்டுப்பாடற்றது.)<br>3. தலவாக்கலை லிந்துலை நகர சபை அதிகார பிரதேசத்தில் நிரந்தர வதிவாளராக இருத்தல்.<br>4. நன்னடத்தை உடையவராக இருத்தல். நாட்டின் எப்பாகத்திலும் சேவை புரிவதற்குரிய உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல். |

3.1 **வேறு தகைமைகள் :**

(1) விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளும் திகதிக்கு 18 வயதிற்கு குறையாமலும் 45 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். மத்திய மாகாணத்தில் அரசாங்க சேவையில் நிரந்தர/சமயாசமய ஊழியருக்கு இவ்வயதெல்லை ஏற்புடையதாகாது.)

(2) விண்ணப்பதாரிகள் பரம்பரையாகவோ அல்லது பதிவின் மூலமாகவோ இலங்கை பிரசையாக இருத்தல் வேண்டும்.

(3) விண்ணப்பதாரி தலவாக்கலை-லிந்துலை ஆட்சி பிரதேசத்திற்குள் 5 வருடங்கள் நிரந்தர வதிவாளராக இருத்தல்.

(4) விண்ணப்பதாரி நல்ல உடல் ஆரோக்கியம் உடையவராக இருத்தல்.

(5) தண்டச் சட்டக் கோவையின் கீழ் நீதிமன்றத்தில் தண்டனை பெற்றவராக இருத்தல் கூடாது.

(6) அரச/உள்ளூராட்சி அல்லது கூட்டுத்தாபன சேவையில் வெளியேற்றப்பட்டவராக இருத்தல் கூடாது என்பதுடன் மாகாண அரச நிருவாக சுற்றறிக்கை இல. 44/90 இன் கீழ் ஓய்வு பெற்றவராக இருத்தல் கூடாது.

(7) தலவாக்கலை - லிந்துலை நகர சபை அலுவலகத்தில் தற்போதைக்கு சமயாசமய அடிப்படையில் சேவையில் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

(8) பதவிக்கு முன்னால் காணப்படும் குறைந்த பட்ச கல்வி தகைமைகளை விண்ணப்பதாரிகள் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

3.2 **பணிக்கமர்த்தும் நியதிகள் :**

(1) இப்பதவி நிரந்தரமானதும் ஓய்வூதிய உரித்துடையதுமாகும்.

(2) விதவைகள்/தபுதாரி, அநாதைகள் ஓய்வூதிய நிதியத்திற்கு அங்கத்துவ பணம் செலுத்துதல் வேண்டும்.

(3) இப்பதவிக்கு நியமனம் பெற்றோர் 3 வருடகால நன்னடத்தைக் காலத்திற்கு உட்பட்டவராவர்.

(4) இவ் ஆட்சேர்த்தல் நியதிகளுக்கும், சட்டதிட்டங்களுக்கும் புறம்பாக இலங்கைக் குடியரசின் தாபனக் கோவை ஒழுங்குவிதிகளுக் கும், நிதி ஒழுங்கு விதிகளுக்கும் அரச திணைக்கள கட்டளைகளுக்கு மத்திய மாகாண சபை அல்லது மத்திய மாகாண அரச சேவை ஆணைக்குழு மற்றும் தலவாக்கலை- லிந்துலை நகர சபையினால் அவ்வப்போது வெளியிடும் ஒழுங்குவிதிகளுக்கும் கட்டளைகளுக்கும் அமைய செயற்படுவதற்கு இணங்க வேண்டும்.

4. **விண்ணப்பப்படிவம் சமர்ப்பிக்கும் முறை :-**

(1) இவ் அறிவித்தலின் மாதிரி விண்ணப்பப்படிவத்தை 12" × 8" அளவான தாளில் தயாரித்து விண்ணப்பிக்கும் பதவியை குறிப்பிட்ட உறையில் இடது பக்கம் எழுதி 2012.09.28 ஆந் திகதிக்கு முன் "செயலாளர், தலவாக்கலை - லிந்துலை நகர சபை, தலவாக்கலை" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கவும். (தற்போது மாகாண அரச சேவையை வகிக்கும் விண்ணப்பதாரிகள் தனது விண்ணப்பப்படிவத்தை நிறுவன தலைவர் மூலம் அனுப்ப வேண்டும்.) குறிப்பிட்ட தினத்திற்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பப்படிவங்கள் நிராகரிக்கப்படும்.

(2) விண்ணப்பப்படிவத்தோடு பின்வரும் ஆவணங்களின் பிரதிகளை இணைத்து அனுப்ப வேண்டும். மூலப்பிரதிகளை நேர்முகப் பரீட்சையின் போது சமர்ப்பிக்க வேண்டும்:-

(i) பிறப்புச் சான்றிதழ் ;
(ii) கல்விச் சான்றிதழ் ;
(iii) வதிவிடத்தை உறுதிப்படுத்துவதற்காக பிரதேச செயலாளரின் உறுதி கையொப்பத்துடனான கிராம சேவையாளர் சான்றிதழ்;
(iv) அண்மையில் பெற்றுக் கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (அதில் ஒன்று கிராம சேவையாளரிடம் பெற்றதாக இருத்தல் வேண்டும்);
(v) தொழில்சார்ந்த அல்லது பணி அனுபவம் தொடர்பான சான்றிதழ் இருப்பின் அவ் சான்றிதழ்கள் (அரச/உள்ளூராட்சி)

(3) போதிய தகைமைகள் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் மட்டும் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படுவர்.

5. **ஆட்சேர்த்துக் கொள்ளும் விதம்**.- போதிய கல்வி தகைமைகளை பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவித்து வெற்றிடங்கள் நிரப்பப்படும்.

விண்ணப்பப்படிவம் கோரப்பட்ட பின் அல்லது கோரப்படும் இடைக்காலத்தினுள் அல்லது இவ் ஆட்சேர்த்தலை தாமதித்தல் அல்லது மாற்றம் செய்தல் அல்லது இவ் அறிவித்தலை இரத்து செய்தல் போன்ற அனைத்து அதிகாரமும் தலவாக்கலை- லிந்துலை நகர சபை செயலாளரிடம் தங்கியுள்ளது.

எச். எம். ஜி. அஜித் புஷ்பகுமார,
செயலாளர்,
தலவாக்கலை - லிந்துலை நகர சபை.

தலவாக்கலை - லிந்துலை நகர சபை,
2012, ஓகத்து 20.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**தலாவக்கலை - லிந்துலை நகர சபை**

மத்திய மாகாண அரச சேவையில் ....................................... பதவி

1. (I) முதலெழுத்துக்களுடன் பெயர் :----.
(II) முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர் :----.
2. நிரந்தர முகவரி :----.
2.1 நிரந்தரமாக வசிக்கும் மாவட்டம் :----.
3. (I) பிறந்த திகதி :----.
(II) 2012.09.28 ஆந் திகதிக்கு வயது :-
வருடங்கள் :----, மாதங்கள் :----, நாட்கள் :----.
4. பால் :----.
5. தேசிய அடையாள அட்டை இல. :----.
6. நீர் இலங்கைப் பிரசையா?/பதிவு செய்தமையாலா? :----.
7. கல்வித் தகைமைகள் (சித்தியடைந்துள்ள பரீட்சைகளின் விபரங்கள்) :-
(I) சித்தியடைந்த தரம்/வகுப்பு :----.
(II) க. பொ. த. (சா. த.) பரீட்சை :----.

பரீட்சை இலக்கம் :----. பரீட்சைக்கு தோற்றிய வருடம் :----. பரீட்சைக்கு தோற்றிய மாதம் :----.

| பாடம் | தரம் | பாடம் | தரம் |
|---|---|---|---|
| | | | |

க. பொ. த. (சா.த.) க. பொ. த. (உ.த.)

8. நீங்கள் தற்போது நகர சபையில் சேவையாற்றுபவராக இருப்பின், சேவையாற்றிய காலம் மற்றும விபரங்கள் :-----.

9. பணி அனுபவம் மற்றும் தொழிற் தகைமைகள் :----.

10. நீங்கள் நீதிமன்றினால் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா ? :----.

இந்த விண்ணப்பப்படிவத்தில் என்னால் சமர்ப்பிக்கப்படுகின்ற தகவல்கள் உண்மையானதும் சரியானதும் என்பதனை உறுதிமொழிகின்றேன். இதில் உள்ள தகவல்கள் ஏதாவது உண்மையற்ற பிழையாயனதாயின் என்னை இப்பதவிக்கு தேர்ந்தெடுப்பதற்கு முன் தெரியவந்தால் தகுதியற்றவனாவேன் என்பதோடு பதவி கிடைக்கப்பெற்ற பின்அவ்வாறான காரணம் நிரூபிக்கப்பட்டால் எந்த ஒரு நட்டயீடும் இல்லாமலே பணியிலிருந்து விலக்கப்படுவேன் என்பதையும் நான் அறிவேன்.

-------,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :----.

**விண்ணப்பதாரி தற்போது அரச சேவையில் பதவி வகிப்பாராயின் நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :**

விண்ணப்பதாரி திரு./திருமதி/செல்வி ....................................... என்பவர் தற்போது இந்நிறுவனத்தில் சேவையாற்றுகின்றார். அவர் எவ்விதத்திலும் சட்டத்திற்குட்பட்ட தண்டனைக்கு (எச்சரிக்கை தவிர்ந்த) ஆளாகவில்லை என இத்தால் சான்றுப்படுத்தப்படுவதுடன் விண்ணப்பப் படிவத்தை சிபார்சு செய்து சமர்ப்பிக்கிறேன்.

-------,
திணைக்களத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவியின் பெயர் :----.
முகவரி :-----.
(பதவி முத்திரையை இடவும்)
திகதி :----.

**முலட்டியன பிரதேச சபை**

தென் மாகாண அரச சேவையில் வெற்றிடம் நிரப்புதல்

முலட்டியன பிரதேச சபையில் வெற்றிடமாகியுள்ள பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நிரந்தரப் பதவிகளுக்கு குறித்த தகுதியைப் பூர்த்திசெய்த முலட்டியன பிரதேச சபை வலுப் பிரதேசத்தில் வதிவுடையோர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுவதுண்டு.

| பதவிப் பெயர் | வெற்றிடம் | சம்பள அளவு | கல்வித் தகைமைகள் |
|---|---|---|---|
| 1. அலுவலக அலுவல் உதவியாளர் | 01 | ரூபா 11,730-10 X 120-10 X 130-10 X 145-12 X 160- ரூபா 17,600 | இரண்டு தடவைகளுக்கு மேற்படாது கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் அல்லது தேசிய கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சையில் சிங்களம் அல்லது தமிழ் மொழி உட்பட 6 பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் |
| 2. வீதி ஊழியர் | 01 | ரூபா 11,730-10 X 120-10 X 130-10 X 145-12 X 160- ரூபா 17,600 | 6 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் |
| 3. வீதி ஊழியர் | 01 | ரூபா 11,730-10 X 120-10 X 130-10 X 145-12 X 160-ரூபா 17,600 | 5 ஆம் தரத்தில் கல்வி கற்றிருத்தல் வேண்டும். |

**2. நியமனங்களுக்கான பொது நிபந்தனைகள் :**

(i) விண்ணப்பதாரிகள் அனைவரும் இலங்கைப் பிரசையாக இருத்தல் வேண்டும்.

(ii) நன்நடத்தையுடையவராகவும், நல்ல சரீர சுகத்தையும் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

(iii) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் திகதிக்கு 3 வருடகால முலட்டியன வலுப் பிரதேசத்தினுள் நிரந்தர வதிவாளராக இருத்தல் வேண்டும்.

(iv) ஏதாவது நீதி குற்றவியல் தொடர்பாக நீதிமன்றத்தினால் குற்றம் சாட்டப்பட்டவராக அல்லது இதற்கு முன் உள்ளூராட்சி நிறுவனத்தினால் சேவையிலிருந்து அகற்றப்பட்டவராக இருத்தல் கூடாது.

(v) விண்ணப்பப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளும் இறுதித் திகதிக்கு 18 வயதிற்கு குறையாதும் 45 வயதிற்கு கூடாதவர்களாகவும் இருத்தல் வேண்டும். தற்போது அரச சேவையில் அல்லது மாகாண அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளின் வயது எல்லை கணிக்கப்பட மாட்டாது.

(vi) இந்த விண்ணப்பங்கள் கோரப்பட்டதன் பின்னர் அல்லது இடைப்பட்ட காலப்பகுதியில் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு தாமத மாக்குதல் அல்லது மாற்றுதல் அல்லது அறிவித்தலை இரத்துச்செய்தல் அனைத்து தகுதிகளும் முலட்டியன பிரதேச சபைக்குரியது.

3. **சேவையில் அமர்த்துவதற்கான நிபந்தனைகள் :**

(i) பதவி நிரந்தரமானதாகும். ஓய்வூதியம் உடையதாகும்.

(ii) பதவி நிரந்தரம் 3 வருட பயிற்சிக் காலத்தின் பின்னாகும்.

(iii) பதவிபெற்றோர் அரச விதவைகள்/ஆண் விதவைகள், அநாதைக் குழந்தைகள் ஓய்வூதிய நிதித் திட்டத்திற்கு பங்குகொள்ளுதல் வேண்டும்.

(iv) இந்த ஆட்சேர்ப்பின் நிபந்தனைகளைத் தவிர தாபனக் கோவையின் நிதி நிபந்தனைகள் தென் மாகாண சபை அல்லது தென் மாகாண அரச சேவை கமிஷன் சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் நிபந்தனைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு உரிய சட்டமூலங்கள் சட்டமூலங்களுக்கு உரித்தான விதிகளுக்கும் முலட்டியன பிரதேச சபையினால் அடிக்கடி விதிக்கப்படும் சபைத் தீர்மானங்களுக்கும் இணங்கி சேவை புரிய இணங்குதல் வேண்டும்.

4. **ஆட்சேர்ப்பு முறைகள்.**- முறைப்படியான நேர்முகப் பரீட்சையின் மூலம் ஆட்சேர்ப்புக்கள் நடைபெறுவதோடு, கீழே குறிப்பிடப்பட்ட தகைமைகளுக்கு புள்ளிகள் வழங்கப்படுவதுண்டு :-

(i) பொது நிபந்தனைகளில் குறிப்பிடப்பட்ட மற்றும் வேறு கல்வித் தகைமைகள்.

(ii) தொழிற் தகைமைகள் மற்றும் தொழிற்பயிற்சி (சமாதான நீதவான் ஒருவரால் சான்றுபடுத்தல் வேண்டும்.)

(iii) உள்ளூராட்சி நிறுவனமொன்றில் சேவை புரிந்திருத்தல் (சேவைச் சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்.)

(iv) மனோபாவத்தையும் சரீர சுகத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

(v) விளையாட்டு மற்றும் வேறு தகைமைகள்.

மேற்குறித்த ஒவ்வொரு தலைப்பின்கீழும் 20 புள்ளிகளுடன் ஆகக்கூடுதலாக 100 புள்ளிகள் கிடைப்பதோடு, நேர்முகப் பரீட்சைக் குழு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் அவரின் நியமனம் பெற்ற உறுப்பினர் உட்பட சபையினால் நியமிக்கப்படும் மூவருக்குக் கூடிய குழுவைக் கொண்டதாகும்.

5. **விண்ணப்பிக்கப்படவேண்டிய முறைகள் :**

(i) இவ்வறிவித்தலின் இறுதியில் கொடுக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு இணங்க தயார்செய்யப்பட்ட விண்ணப்பப்படிவம் மூலம் விண்ணப்பிக்கலாம்.

(ii) விண்ணப்பப்படிவங்களுடன் கீழே குறிப்பிடப்படும் சான்றிதழ்களின் படப்பிரதிகள் இணைக்கப்பட வேண்டியதோடு, நேர்முகப் பரீட்சையின்போது மூலப்பிரதிகள் முன்வைக்கப்படல் வேண்டும் :

(1) பிறப்புச் சான்றிதழ் ;
(2) தேசிய அடையாள அட்டையின் பிரதி ;
(3) கல்விச் சான்றிதழ் ;
(4) தொழிற் தகைமைகள் மற்றும் பயிற்சி தொடர்பான சான்றிதழ் ;
(5) வதிவை உறுதிப்படுத்தும் சான்றிதழ் ;
(6) சமீப காலத்தில் பெற்றுக்கொண்ட நற்சான்றிதழ்கள் இரண்டு (ஒன்று கிராம உத்தியோகத்தர் அவர்களிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.)

(iii) அனைத்து விண்ணப்பப்படிவங்களையும் உரிய முறைப்படி பூர்த்திசெய்து 2012.10.05 ஆந் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் விதமாக "செயலாளர், முலட்டியன பிரதேச சபை" என்ற முகவரிக்கு பதிவுத்தபால் மூலம் அனுப்பிவைக்கப்படுதல் வேண்டும். விண்ணப்பங்கள் போடப்பட்ட கடித உறையின் இடது மேல் மூலையில் விண்ணப்பிக்கப்படும் பதவி குறிப்பிடப்படல் வேண்டும்.

விண்ணப்பதாரர்களினால் சமர்ப்பிக்கப்படும் தகவல்கள் மற்றும் சான்றிதழ்கள் பொய்யானதும் போலியானதும் என தெரியவந்தால் அல்லது ஏதாவது முக்கிய தகவல்களை மூடிமறைக்கப்பட்டிருப்பதாக வெளிப்படுமாயின் சேவையில் அமர்த்தப்பட்ட எந்த சந்தர்ப்பத்திலும் சேவையிலிருந்து நீக்கப்படுவதற்கு ஆளாவேன் என்பதை நான் அறிவேன்.

ஜயரத்ன குருசிங்க,
செயலாளர் (பதில்),
முலட்டியன பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
முலட்டியன.
2012, ஓகத்து 28.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**முலட்டியன பிரதேச சபை**

............................ பதவி

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :----.

2. முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் :----.

3. நிரந்தர விலாசம் :----.

4. பால் (ஆண்/பெண்) :----.

5. பிறந்த திகதி :

ஆண்டு :----. மாதம் :----. திகதி :----.

6. 2012.10.05 ஆந் திகதியன்று வயது :

வருடங்கள் :----. மாதங்கள் :----. நாட்கள் :----.

7. தேசிய அடையாள அட்டை இலக்கம் :----.

8. இலங்கைப் பிரசையாவது பிறப்பினாலா ? பதிவின் மூலமாகவா ? :----.

9. திருமணமானவரா/திருமணமாகாதவரா ? :----.

10. முலட்டியன பிரதேச சபை வலுப்பிரதேசத்தில் வதிவு காலம் :----.

11. கல்வித் தகைமைகள் :----.

12. தொழிற் தகைமைகள் :----.

13. சேவை அனுபவம் :----.

14. வேறு விசேட தகைமைகள் :----.

மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து விபரங்களும் எனது அறிவிக்கும் நம்பிக்கைக்கும் எட்டியவரையில் உண்மையானதும், சரியானவையு மென வெளிப்படுத்துகின்றேன். ஆட்சேர்ப்பு பரீட்சை பற்றிய நிபந்தனைகளின்படி என்னால் தவறான தகவல்கள் தரப்பட்டிருப்பின்

பரீட்சைக்கு முன்போ பின்போ தெரியவந்தால் எந்தவித நஷ்டஈடும் இன்றி வேலையிலிருந்து நீக்கப்பட ஏதுவாகும் என நான் அறிந்து கையொப்பமிடுகின்றேன்.

----,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :----.

**தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு திணைக்களத் தலைவரின் சான்றிதழ்**

இந்த விண்ணப்பதாரியாகிய ......................................................... திரு./திருமதி/செல்வி தற்போது இத்திணைக்களத்தில்/நிறுவனத்தில் ............................................... சேவை புரிகின்றார். மேற்படி பதவிக்காக அவர் தெரிவுசெய்யப்பட்டால் விடுவிப்பதற்கு இணக்கம் தெரிவிக்கின்றேன்/தெரிவிக்கவில்லை. அவர் எந்தவொரு வகையிலுமாக ஒழுக்காற்று விசாரணை தண்டனைகளுக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் சான்று பகர்கின்றேன். விண்ணப்பப்படிவத்தை சிபாரிசு செய்து சமர்ப்பிக்கின்றேன்.

----,
திணைக்கள/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :----.
பதவி :----.
திகதி :----.
இலச்சினை :----.

9-458